<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

<u>அசல் வழக்கு எண்.2/2025</u>

**2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23–ம் நாள் புதன் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி. S.இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கணேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ரத்தினம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :தழுதாழை | வயது | : 65/2025 |

**முதல் விசாரணை :**

1(i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவா 1வது அயிட்ட சொத்திற்கு குப்பன் மகன்கள் அழகன், வீரன் என்பவரின் பெயரில் ஏற்பட்ட 20.01.2009ம் தேதியிட்ட பட்டா எண்.765–ற்குரிய கணினி பட்டாவின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி அழகன் மற்றும் வீரன் பெயரில் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு பல்வேறு தேதிகளில் செலுத்தப்பட்ட வரி ரசீதுகளின் அசல்கள் (7 எண்ணிக்கை) தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.